செ.வெ.எண் : 960/2017 நாள்: 11.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**தடிக்காரன்கோணம், பால்குளம், சுருளோடு ஆகிய பகுதிகளில் பயிர் சேதம் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., பார்வையிட்டு ஆய்வு -**

கன்னியாகுமரி மாவட்டத்தில், தடிக்காரன்கோணம், பால்குளம், சுருளோடு ஆகிய பகுதிகளில் ஒகி புயலின் சேதமடைந்த இரப்பர், வாழை, அன்னாசி உள்ளிட்ட பயிர் சேதங்களை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.12.2017) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வுக்கு பின்னர் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் அவர்கள் தெரிவித்ததாவது:-

புயல் சேதமுற்ற வேளாண்மை, தோட்டக்கலை, பயிர்கள் குறித்து கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில், 38 வருவாய்க்கிராமங்களை சார்ந்த 14,616 தென்னை மரங்களும், 309 ஹெக்டர் நிலப்பரப்பளவில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களும் சேதமடைந்துள்ளன. தோட்டக்கலைத்துறை பயர்களான வாழை 1,926 ஹெக்டர் நிலபரப்பளவிலும், மரவள்ளி 190 ஹெக்டர் நிலபரப்பளவிலும், ரப்பர் 1,407 ஹெக்டர் நிலபரப்பளவிலும், நல்லமிளகு 32 ஹெக்டர் நிலபரப்பளவிலும், கிராம்பு 42 ஹெக்டர் நிலபரப்பளவிலும் என மொத்தம் 3,623 ஹெக்டர் தோட்டக்கலை பசேதமடைந்ததாக கணக்கிடப்பட்டு, சேதங்கள் குறித்து உறுதி செய்யும் பணி வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களால் ஆய்வு செய்யும் பணி தொடர்ந்து முழுவீச்சில் நடைபெற்று வருகிறது என வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, வேளாண்த்துறை இணை இயக்குநர்கள் திரு. பாண்டியன், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் திரு. சிவக்குமார், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு. அசோக் மேக்ரின் உள்ளிட்ட பலர் உடன் சென்றனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி.**